DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
DVC No. 2 of 2024
List of witness/Prosecution witness:

| | |
|---|---|
| Name | திரு. ரமேஷ் |
| Fathers name | திரு. முத்து |
| Village | திருகண்டலம் |
| Age | 51 |

Petitioner called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் 12.40

1. நீங்கள் உங்கள் மனைவி கடன் கொடுத்தாக கூறியீருக்கிறார்கள் எப்போது எந்த தேதி என்று கூறவில்லை என்றால் 2016ம் ஆண்டு கடன் கொடுத்தார். நீங்கள் இந்த விவரத்தை நிருபாணவாக்குமூலத்தில் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

2. கடன் கொடுத்ததற்கு எதெனும் கடனுறுதிசீட்டு எதாவது எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்த மசா.ஆ 16 ஆவணமானது எந்த காலத்தின் வங்கி Statement என்றால் 08.04.2021ம் தேதியிட்ட இந்த ஆவணம் எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் மனுதாரர்க்கு வருமாணம் இருப்பதை காட்டுவதற்காக என்னிடம் உள்ள ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன்.

3. தற்போது வங்கி கணக்கில் உள்ள விவரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. தற்போது உள்ள வங்கி கணக்கை தாக்கல் செய்யாமல் எதற்காக 2021ம் ஆண்டில் இருக்கும் வங்கி கணக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வருமானம் இருக்கு என்பதை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

4. எதன் அடிப்படையில் மனுதாரரின் வங்கி கணக்கை நீங்கள் எடுத்தீர்கள் என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை.

5. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 09.07.2021ல் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் அது மசா.ஆ 4 ஆவணம் என்றால் சரிதான். இந்த புகார் மனு எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. முதலில் பெரியபாளையம் காவல் நிலயத்தில் உங்களையும், ரேவதியையும் விசாரணை

செய்தும், பின்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உங்களையும் ரேவதி என்பவரையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். பெரியபாளையம் காவல் நிலையத்திற்கு எங்கிருந்து அழைத்து சென்றார்கள் என்றால் என் வீட்டிலிருந்து அழைத்து சென்றார்கள். காவல் நிலையம் சென்ற பின்னர் என் மீது வழக்கு இருப்பதாக கூறி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு ஆஜராகும் படி கூறினார்கள்.

6. பெரியபாளையம் வீட்டில் நானும் ரேவதியும் இருந்தோம் அப்போது மனுதாரர் மற்றும் எனது மகன் ஆகியோர் அங்கு வந்து கையும் கலவுமாக பிடித்து சண்டை போட்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் தற்போதும் ரேவதி என்பவருடன் தொடர்பில் இருக்கின்றீர்களா என்றால் இல்லை.

7. நீங்கள் மனுதாராரை எந்த விதத்திலும் கவனிக்காமல் நீங்கள் ரேவதி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றீர்கள் மேலும், நீங்கள் ரேவதி என்பவருடன் வாழ்ந்து வருவதால் நீங்கள் மனுதாரர்க்கு பொருளாதார ரீதியாக எந்த உதவியும் செய்யாமல் அவர் நிலத்தை வைத்து சம்பாத்தித்து வருகிறார் என்றும், கடன் பெற்று உங்களுக்கு அவப்பெயர் உண்டாக்கியதாக கூறுகின்றீர்கள் என்றால் சரியல்ல.

8. 09.07.2024 அன்று நீங்களும் ரேவதியும் ஒரே வீட்டில் இருப்பதற்காக காரணம் இருக்கிறது என்றால் என்னுடைய கணிணி UPS அங்கு இருக்கிறது அதை எடுத்து வர சென்றேன்.நாங்கள் ஒரே இடத்தில் வேலை செய்து வருகின்றோம் UPS சரி செய்துவிட்டு ரேவதி வீட்டில் கொடுத்துள்ளனர் அதனால் நான் அதை திருப்பி தர சென்றேன். நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள் அவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் நாங்கள் வேறுவேறு பஞ்சாயத்தில் வேலை செய்கின்றோம். ஆனால் ஒரே Zone.

9. நீங்கள் வங்கியின் கடன் வாங்கியபோது அந்த கடன் பத்திரத்தில் ரேவதி என்பவரும் கையொழுத்து போட்டு உள்ளார் என்றால் சரிதான்.

மனுதரார் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 1.15